# பாடு மனமே



கவிஞர் வி. கந்தவனம்

25

# பாடு மனமே!

கவிஞர் வி. கந்தவனம்

வெளியீடு:

நுணுவிலூர்த் தமிழ் மன்றம்

சாவகச்சேரி

விற்பனையுரிமை:

வீரகேசரி லிமிட்டெட்

த. பெ. எண் 160

கொழும்பு

க. நாகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

முதற் பதிப்பு: தை, 1972
பதிப்புரிமையுடையது.
ஏக விற்பனையாளர்:
வீரகேசரி லிமிடெட்
த. பெ. எண் 160
கொழும்பு
விலை: ரூபா 2-25

**PĀDU MANAMEʹ**

Author:
**Poet V. Kandavanam, B. A.**

Publishers:
**Nunaviloor Tamil Mantram**
.Chavakachcheri

First Edition:
January, 1972

Sole Distributors:
**The Virakesari Limited**
P. O. Box 160
**Colombo**

**Price: Rs. 2-25**

# பொன்னர் இளையப்பா

கன்னற் றமிழாடி
மன்னுங் கவிபாடி
வன்னப் பறவையென
உன்னிப் பவனிவர
என்னைத் தினம்விட்டுத்
தன்னந் தனியாக
என்றன் குடும்பத்தைத்
தன்கண் ணிமைபோல
என்னே தவஞ்செய்தேன்
என்னத் தினம்போற்றிப்
பொன்னே யெனக்காக்கும்
என்னார் மணமாமன்
பொன்னர் இளையப்பா
வென்னுங் குணக்குன்றுக்
கென்னோர் கைம்மாறு
யிந்நூல் காணிக்கை.

— வி. கந்தவனம்

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை
*28 - 10 - 71*



க. நாகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# பதிப்புரை

திரு. வி. கந்தவனம் அவர்கள் பெயர்பெற்ற கவிஞர்; அடக்கமான அறிஞர். அவரது படைப்புக்கள் பல, கொழும்பு அரசு வெளியீடாகவும், சுன்னுகம் வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடாகவும், குரும்பசிட்டி சன்மார்க்க சபை வெளியீடாகவும் வெளிவந்துள்ளன. எமது மன்றமும் கவிஞரின் கவிவளத்தையும் கற்பனைத்திறத்தையும் உலகமெலாம் பரவும்வகை செய்தல்வேண்டும் என்ற ஆர்வத்தால் உந்தப்பெற்று அவரது முறிகண்டிப் பத்து, நுணுவிலூர், நல்லூர் நாற்பது, வித்தியானந்த மாலை முதலிய நூல்களை வெளியிட்டிருக்கின்றது. இப்பொழுது கவிஞர் அவர்களின் **பாடு மனமே!** என்ற இவ்வரிய நூலை வெளியிடும் பேறு கிடைத்தமை குறித்துப் பெருமையடைகின்றோம்.

'பாடு மனமே!', கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் இருபது பாடல்களின் தொகுப்பு. தொகுப்பிலே ஒரு சிறப்பு: கவிஞர் அவர்கள் இதுவரை காலமும் கவிதை பற்றியும் கவிஞர் பற்றியும் பாடிய கவிதைகள் மட்டுமே இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. முதற் பதினைந்து கவிதைகளும் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தவை. 'கூறிக் களித்தவை' என்ற பகுதியில் இடம் பெற்றுள்ள கடைசி ஐந்து கவிதைகளும் கவியரங்கங்களிற் படிக்கப்பெற்றவை.

கவிதை என்றால் என்ன? அது எவ்விதம் பிறக்கின்றது? ஏன் பிறக்கின்றது? கவிதை கவிதைக்

காகவா? என்பனபோன்ற பல வினுக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் கவிஞர் அவர்களின் அனுபவ விடைகளை இந்நூல் கொண்டிருப்பதை இரசிகப் பெருமக்கள் கவனிப்பர். இதுபோலவே கவிஞர் எனப்படுவோர் யாவர்? அவர்களது இலட்சியமென்ன? பணியென்ன? சமுதாயத்திலே அவர்களுக்குரிய இடமென்ன? என்பன போன்ற விடயங்கள் பற்றியும் விசாரணை நடாத்தப்படுகின்றது. தெளிவான, நியாயமான விடைகளும் நாட்டப்படுகின்றன.

இவ்விதம் இந்நூலின் பொருளையும் பகுப்பையும் கவனித்துணர்வோர், இதனை ஒரு தொகுப்பாகக் கருதாது ஒரு குறிப்பிட்ட பொருள்மீதெழுந்த முழு நூலாகவே கருதுவர். கவிதை என்ற பொருளைக் கவிதையாலேயே கையாண்ட ஒரு முழுநூல் இதுவரை தமிழில் வெளிவரவில்லை. தமிழிலென்ன, ஆங்கிலமுட்பட உலகில் வேறெந்த மொழியிலும் இது போன்ற நூல் வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையில் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் 'பாடு மனமே!' என்ற இந்நூல் தனிவகையானது; புதுமுறையானது. இத்துணைப் புதிய முயற்சியை, ஆக்கப் படைப்பை அறிஞர்களும் கவிஞர்களும் ஆய்வுநரும் அன்பர்களும் உவந்தேற்றுப் போற்றுவர் என்பது உறுதி.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்கும், அட்டைப் படம் அமைத்த ஆற்றல் வாய்ந்த ஓவியர் 'சௌ' அவர்களுக்கும், இதனை அழகுற அச்சேற்றிய தெல்லிப்பழை குகன் அச்சகத்தினருக்கும், இதன் விற்பனை உரிமையை ஏற்றுள்ள வீரகேசரி லிமிட்டெட் தாபனத்தார்க்கும் எமது மன்றத்தின் நன்றி உரித்தாகும்.

சுற்றுப்பயணச் சபை<br>காலிமுகம்<br>கொழும்பு, 11-9-1971

**இரா. தெய்வேந்திரா**<br>இணைச் செயலாளர்<br>**நுணுவிலூர்த் தமிழ் மன்றம்**

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்

வழங்கிய

# அணிந்துரை

"பிறந்ததும் மிகக் கற்றதும் பெரும்
பீடுகொள் கவி பாடவே"

எனக் கவிஞர் கந்தவனம் கூறும் தமிழ்க்கவி நீண்ட நெடுங்கால வரலாறுடையது; பாணர்முதற் புலவர் வரை பல்லோராற் கையாளப்பட்டது; காதல், வீரம், அறம், அரசியல், பக்தி முதலிய பல்வேறு துறைகளுள் நுழைந்து வளர்ந்தது.

பாடல் எப்படிப் பிறக்கின்றது, என்ன பணியினைச் செய்கின்றது என்ற கேள்விகள் தமிழிலக்கிய ஆய்வாளர்களால் எழுப்பப்பட்டபோது, அவற்றுக்கு விடையளிக்க முயன்றவர்கள், தமிழ்க் கவிஞர்களின் பாடல்களிலிருந்து எடுத்துக்காட்டுகளைத் தந்தனர். உருவமே முக்கியம், யாப்பே உயிர் என்ற கருத்துக்கள் காலகதியில் முக்கியத்துவம் இழந்தன. உருவத்தைப் புறக்கணிக்கமுடியாதபோதும், பாட்டின் உயிர் பாவலனின் உள்ளத்தனுபவ உணர்வின் உண்மைத் திறனிலேயே தங்கியிருக்கின்றதென்ற கருத்து நாளடைவிலே தலைமை பெற்றது. பாட்டுக்கென்று ஒரு பணியுண்டு; அது

உலகியல் வாழ்வில் மனித உயர்வைத் தேடுவதாகவும், நாடுவதாகவும், நாட்டுவதாகவும் அமையவேண்டும் என்ற கொள்கை வலிமையுற்றது.

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வார்"

என்ற பாரதியின் கூற்று, கவிதைபற்றிய இக்காலக் குரலாகும்.

கவிஞன் ஒருவன் தன் கவிதையில் அமைத்துக் கொள்ளும் பொருள் அவனது அனுபவ விரிவையும், உணர்வு ஆழத்தையும், அவதானத் திறமையையும் பொறுத்ததாகும். கவிதை செம்மையுறுவது அவனது அனுபவ உணர்வின் ஒருமைப்பாட்டினையும், புலமைத் திறனையும், கற்பனை சக்தியையும் பொறுத்தது. இன்ன பொருளைப் பற்றித்தான் கவிதை புனைய முடியுமென்று நாம் எல்லையிட்டுக் கூறமுடியாது.

அலகில் சோதி யான - ஈசன்
அருளினாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும் - கவிக்கு
உரிய பொருளாம் ஐயா!

என்று தேசிகவிநாயகம்பிள்ளை கூறியிருப்பது நோக்கத்தக்கது. இக்கருத்துப்பற்றியே கவிஞர் கந்தவனமும்,

இறைவன்ற னியக்கத்தி
லென்னென்ன வுண்டோ
எல்லாமென் பாட்டுக்குப்
பொருளாக வேண்டும்

என வேண்டுகின்றார். பாரதியார்,

"தினமும்இவ் வுலகில் சிதறியே நிகழும்
பலபல பொருளிலாப் பாழ்படு செய்தியை
வாழ்க்கைப் பாலையில் வளர்பல முட்கள்போல்
பேதை யுலகைப் பேதைமைப் படுத்தும்
வெறுங் கதைத் திரளை......................
அனைத்தையும் பயன்நிறை அனுபவ மாக்கி
உயிரிலாச் செய்திகட்கு உயிர்மிகக் கொடுத்து
ஒளியிலாச் செய்திகட்கு ஒளியருள் புரிந்து
வான சாத்திரம் மகமது வீழ்ச்சி
சின்னப் பையல் சேவகத் திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையும் ஆங்கே அழகுறச் செய்து
இலௌகிக வாழ்க்கையின் பொருளினை இணைக்கும்
பேதை மாசத்தியின் பெண்ணே"

எனக் கவிதைத் தலைவியைப் போற்றுமிடத்து, கவிதைக்கு எதுவும் பொருளாகலாம், அவ்வாறு எதனையும் பொருளாகக் கொள்ளும்போது, உயிரிலாச் செய்திகட்கு உயிர் கொடுத்தும், ஒளியிலாச் செய்திகட்கு ஒளி புரிந்தும் அழகுற அமைப்பதே கவிஞனின் ஆற்றல் என்பதனை உணர்த்திச் சென்றார்.

கவிஞர் கந்தவனம்,

மல்லுக் கழகு தோழன்று
மலருக் கழகு நிறமன்று
வில்லுக் கழகு விசையன்று
வெற்றிக் கழகு விழவன்று
கல்லுக் கழகு கனமன்று
கவிதைக் கழகு பொருளன்று
புல்லும் பூண்டும் மிகநல்ல
பொருளா மாற்றற் புலவர்க்கே

என்னும் பாடலிற் கவிதைக்குப் பொருள் முக்கிய மல்ல, புல்லும் பூண்டுங்கூட ஆற்றல் வாய்ந்த புலவருக்குக் கவிதைப் பொருளாக அமையும் என்பதனைக் கூறிவிட்டு, எப்பொருள் கவிதைப் பொருளாக இருப்பினும் கவிஞர் அதனைக் கையாளும் வகையிலேயே கவிதைச் சிறப்புத் தங்கியுள்ளது என்பதனை,

கவிதைப் பொருளெப் பொருளெனினும்
கவிஞ னதனைக் கையாளுங்
கலையாற் காந்தற் கற்பனையாற்
புவியிற் பொன்ரு தென்றென்றும்
புகழோ டிலங்கச் செய்திடுவான்

என்னும் பாடலிற் சுட்டிக் காட்டுகின்ருர்.

கவிதையின் பிறப்பினையும், வளர்ச்சியினையும், உருவினையும், திருவினையும் அறிந்துள்ள கவிஞர் கந்தவனத்தின் 'பாடு மனமே' என்ற நூலில் 'மீறிப் பொழிந்தவை' என்ற பகுதியிலே அமைந்துள்ள

பாடல்கள் யாவும் கவிதையின்பாற் கவிஞர் கொண்ட ஈடுபாட்டின் மிகுதியினைக் காட்டுகின்றன. பார்புகழும் பண்புகளை நாட்டுகின்ற பாட்டு வரவேண்டுமென விரும்பிய கவிஞர், பராசக்தியிடம்

பெருகியென் னெஞ்சினிற்
　　கவிபீறிட
அருள்தர வேண்டுமென்
　　கலாவல்லியே

என வரம் கேட்கின்றார்.

'ஊறித் திளைத்தவை' என்ற பகுதியில்,

கொள்ளை மலர்கள் குலுங்கிச் சிரிக்கையிற்
　　கொப்புளிக்குங் கவிதை - அந்தக்
கள்ளில் விழுந்து கவலை மறந்துள்ளங்
　　காவடி யாடி நிற்கும்

எனப் பார்வையிற் படுகின்ற ஒவ்வொன்றுள்ளும் பல கவிதைப் பொருளைக் கண்டு அதில் ஊறித் திளைத்து இன்புறுகின்றார்.

கவிதையிலே திளைத்த கவிஞரின் கவிதை பற்றிய கொள்கைகளைத் 'தேறித்தெளிந்தவை' என்னும் பகுதிப் பாடல்கள் காட்டுகின்றன.

செறிந்து வாழினும் பருந்து போலவே
　　பறந்து மானிடர் தன்மைகள்
அறிந்து தக்கவை கறந்து மக்களுக்
　　கான பாட்டுகள் பாடவே

தாம் பிறந்திருப்பதாகக் கூறும் கவிஞர், மக்களுக்குத் தக்கனவாக எவற்றை விரும்பினர் என்பதனைப் 'பாடு மனமே', 'பாடு நெஞ்சமே' என்ற தலைப்பிலேயுள்ள பாடல்கள் காட்டுகின்றன.

"ஏழை யென்றொரு மானிட னிங்கே
இல்லையில் லையெனத் துள்ளியே பாடு"

"ஒற்றுமை யோங்கிவ ளர்ந்திடப் பாடு"

"சாதி சமய வேற்றுமை யில்லைச்
சண்டைக ளாற்பய னுவதொன் றில்லை
நீதி யாவர்க்கு மொன்றெனப் பாடு"

என மக்கள் இன்பமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு உதவுவனவற்றையே பாடுமாறு வற்புறுத்துகின்றார்.

'கூறிக் களித்தவை' என்னும் பகுதியில்,

"மாற்ற மாம் வைய கத்து
மாந்தரின் வாழ்வு நோக்காம்"

என்ற இலட்சிய நோக்கோடு,

அறிவினைத் தீட்டி யுள்ள
அன்பினை யூட்டி நல்ல
நெறிகளைக் காட்டி நீதி
முறைகளை நாட்டி வாழ்வில்
உறுபயன் விளைக்க வல்ல
இறையருள் காட்டி இன்ப

நிறைபுகழ் நாட்டை யன்றோ
நிறுவநாம் பாடு கின்றோம்

எனக் கவிஞர் கந்தவனம் அடித்துக் கூறுகையில், அன்னாரிடம் மக்கள்யுகக் கவிஞன் இலட்சியக் குரலைக் கேட்கக்கூடியதாயிருக்கின்றது.

இவரின் உவமைகளிற் புதுமையைக் காணலாம்.

வம்பலரும் பேராத
ஊைப்பொலிவு போன்று
மாண்புமிகு சிவனொளியின்
வல்லநிலை போன்று
கெம்பியெழும் மாவலியின்
கிளர்ச்சியினைப் போன்று
கீரிமலை யூற்றுத்தருங்
குளிர்ச்சியினைப் போன்றிவ்
வம்புவியை யாளவொரு
பாட்டுவர வேண்டும்

என்ற பாட்டிலுள்ள உவமைகள் புதுமையாக அமைவதுடன் ஈழநாட்டுடன் தொடர்புடையனவாக உள்ளன.

களனியின் பெருக்கைப் போன்றுங்
காலியின் விளக்கைப் போன்றும்
வளமலி யாழ்ப்பா ணத்து
மாம்பழச் சுவையைப் போன்றுந்
தெளிதிரு வருள்கொ ழிக்குந்
திருமலைச் சிறப்புப் போன்றும்

உளமிக வார்க்கப் பாடும்
ஒண்புகழ் கவிஞர்

என்ற பாடலிலும் மண்வாசனை கமழ்கின்றது.

" ஆழிசூழ் உலகத்தை யாள்கவி
ஆக்கிடா துயிர் போக்கிடேன் "

என்ற சபதங்கொண்ட கவிஞர் கந்தவனம்,

" என்னவோ ஐயா பாடுவ தெம்பணி "

எனக் கொண்டு, 'பாடு மனமே' என்ற கவிதை நூலை எமக்கு அளித்துள்ளார்; 'உன்னிக் கேட்டு நன்னெறி தழைக்க வாழ்தல்' எம் பணியாகும்.

பேராதனை,
*18 - 8 - 1971*

சு. வித்தியானந்தன்

# பாடு மனமே!

## கவிதைகள்


I. மீறிப் பொழிந்தவை — பக்கம்

1. பாட்டுவர வேண்டும் — 17
2. ஒரேயொரு வரம் — 21
3. கனவும் நினைவும் கவிதை — 24
4. பாவலனுகிடல் வேண்டும் — 28
5. எல்லாமென் பாட்டுக்குப் பொருளாக வேண்டும் — 31

II. ஊறித் திளைத்தவை

6. ஒருருவம் ஒளியுருவம் — 35
7. இயற்கைக் கவிகள் — 39
8. கவிதைக் கன்னிப் பரிசு — 41
9. விந்தை அமைதி நிலவுதே — 44
10. பிறந்தன சிறந்தநற் கவிதைகளே — 46

III. தேறித் தெளிந்தவை

11. நான் பிறந்ததும் ஏதுக்கே — 51
12. பாடு மனமே — 54
13. பாடு நெஞ்சமே — 57
14. பாட்டுப் பாடுவேனே — 61
15. கவிதைக்கழகு பொருளன்று — 64

IV. கூறிக் களித்தவை

16. பாவலர்க் காற்றல் உண்டு — 70
17. பாட்டுக்கு நோக்கமுண்டு — 75
18. பாடுவது எம்பணி — 82
19. பாட்டாவது கேட்டாவது — 91
20. ஈன்றதில் உவந்தேன் — 98

# 1 மீறிப் பொழிந்தவை

1. பாட்டுவர வேண்டும்
2. ஒரேயொரு வரம்
3. கனவும் நினைவும் கவிதை
4. பாவலனுகிடல் வேண்டும்
5. எல்லாமென் பாட்டுக்குப் பொருளாக வேண்டும்.



# பாட்டுவர வேண்டும்

பாட்டுவர வேண்டுமொரு
பாட்டுவர வேண்டும்
பார்புகழ வல்லவொரு
பாட்டுவர வேண்டும்
கேட்டவர்கி றுங்கிவிழும்
பாட்டுவர வேண்டும்
கேடில்விழுச் செல்வமெனும்
பாட்டுவர வேண்டும்

ஏட்டிலிடம் பெற்றுயரும்
பாட்டுவர வேண்டும்
ஈடிணையி லாதவொரு
பாட்டுவர வேண்டும்
பாட்டுவர வேண்டுமொரு
பாட்டுவர வேண்டும்
பார்புகழும் பண்புகளை
நாட்டிவர வேண்டும்!

ஏற்றதமி ழின்சுவையில்
ஊறிவர வேண்டும்
எங்கள்தமி ழன்பெருமை
கூறிவர வேண்டும்
வீற்றரிய செந்தமிழிங்
காளவர வேண்டும்
மேன்மைமிகு நந்தமிழர்
வாழவர வேண்டும்
வேற்றுமைகள் தீரவழி
காட்டிவர வேண்டும்
வீரமர பின்திறனை
யூட்டிவர வேண்டும்
ஆற்றல்திட மாய்நிலைசி
றக்கவர வேண்டும்
ஆக்கமுட னேபலபி
றக்கவர வேண்டும்!

காற்றுநிலம் நீரில்நெருப்
பிற்கவியும் வானில்
காலமதை வென்றுகலந்
தார்த்துவரும் பாட்டு
ஊற்றருவி சோலைமலை
காடுகரைத் தென்றல்
ஓடியுற வாடிமகிழ்
வோடுவரும் பாட்டு
சேற்றுநிலம் காரைநிலம்
பாலைநில மெல்லாம்
நாற்றுநில மாக்கிவளம்
நல்கிவரும் பாட்டு
போற்றியிறை வன்புகழ்பொ
ழிந்துவரும் பாட்டு
பொங்கிவர வேண்டுந்தமிழ்
பூக்கவர வேண்டும்!

தேற்றமுடி யாதவரைத்
தேற்றிவர வேண்டும்
தீர்க்கமுடி யாததுயர்
தீர்த்துவர வேண்டும்
சாற்றமுடி யாப்புதுமை
சாற்றிவர வேண்டும்
சங்கநிதி பதுமநிதி
ஏற்றிவர வேண்டும்

போற்றுபவை போற்றிமிகத்
தூற்றுபவை தூற்றி
நேற்றைநிலை மாற்றியுயர்
நீதிநிலை நாட்டும்
ஆற்றலுள வான்றநலப்
பாட்டுவர வேண்டும்
ஆனகலை யானைமுகன்
ருனருளல் வேண்டும்!

அம்பலவி யான்றகொழும்
புக்கனிகள் போன்றே
ஆனபுக ழீட்டுமருங்
கல்வகைகள் போன்று
வம்பலரும் பேராத
னைப்பொலிவு போன்று
மாண்புமிகு சிவஞெளியின்
வல்லநிலை போன்று
கெம்பியெழும் மாவலியின்
கிளர்ச்சியினைப் போன்று
கீரிமலை யூற்றுத்தருங்
குளிர்ச்சியினைப் போன்றிவ்
அம்புவியை யாளவொரு
பாட்டுவர வேண்டும்
தும்பிமுகன் தூயவருள்
தோய்ந்துவர வேண்டும்!



# ஒரேயொரு வரம்

ஒருவரம் ஒருவரம்
ஒரே யொருவரம்
உலகினுக் குறுபயன்
உணர்ந் தோதிடும்
ஒருவரம் ஒருவரம்
இருள் போக்கிடும்
ஒளிதர வழிபெற
ஒரே யொருவரம் !

சரிவர அறநெறி
தழைத் தோங்கிட
    பெருமனக் கொள்கைகள்
    பிறந் தாண்டிட
இருநிலம் ஒருகுலப்
பிணைப் பெய்தியே
    இலங்கிடச் செய்திடு
    இமா லயவரம்!

ஆணவப் பேயினம்
அடி வீழ்ந்திட
    அன்பர்கள் அரசுசெய்
    முடி தாங்கிட
வீணர்கள் மெய்ந்நெறி
யுணர்ந் துய்திட
    மேன்மைகொள் நீதியெங்
    கணும் ஓங்கிட —

ஒருவரம் ஒருவரம்
ஒரே யொருவரம்
    விரிவெளி யெனும்பெரு
    மடி மீதினில்
பொருள்களை இயக்கியே
விளை யாடிடும்
    ஒருமகள் பெருமகள்
    பரா சக்தியே —

பரவிநின் பதமலர்
பணிந் தேற்றினேன்
உருகிநின் னருமடி
உவந் தேறினேன்
பெருகியென் னெஞ்சினிற்
கவி பீறிட
அருள்தர வேண்டுமென்
கலா வல்லியே !



# கனவும் நினைவும் கவிதை

கவிதை கவிதை கவிதை
புவியிற் காணும்
    பொருள்கள் யாவும்
கவிதை எனக்குக் கவிதை!

கனவும் நினைவும் கவிதை
அனலும் புனலும்
    காற்றும் ஆற்றல்
வினைகொள் கவிதை கவிதை!

கண்ணுங் கருத்துங் கவிதை
மண்ணும் விண்ணும்
    வெளியும் விரியும்
வண்ணக் கவிதை கவிதை!

எனக்குக் கடவுள் கவிதை
மனதுக் கின்பம்
    வாழ்வுக் கின்பம்
மறுமைப் பிறவிக் கின்பம்!

தேறும் உண்மை ஒளியில்
ஊறும் உணர்வை
    உம்பர் மொழியிற்
கூறுங் கவிதை கவிதை!

நெஞ்சைக் கிள்ளும் துள்ளும்
கொஞ்சிக் குலவும்
    கூடித் தழுவும்
மிஞ்சிப் பிறக்குங் கவிதை!

அன்பே வாழும் கவிதை
அன்பும் அறிவும்
    ஆற்றல் வளமும்
தென்பும் பிறக்கக் கவிதை!

உள்ளத் துயர்வே கவிதை!
தெள்ளத் தெளிவுஞ்
செய்கைத் துணிவும்
துள்ளிப் பயக்குங் கவிதை!


மக்கள் வாழக் கவிதை
மக்கள் வாழ்வும்
வளமும் போற்றும்
தக்கோர் கவிதை கவிதை!

மன்னும் எழிலார் இயற்கை
பன்னித் தோயும்
பண்பார் நெஞ்சில்
மின்னிப் பிறக்குங் கவிதை!

எனையாள் கவிதைத் தாயே
புனைதல் இயற்றல்
புளுகல் வேண்டாம்
கனிதல் வேண்டுங் கவிதை!

அல்லும் பகலும் கவிதை
கல்லுங் கனியப்
பாடிக் காலம்
வெல்லல் வேண்டும் வாணீ!

கவிதை கவிதை கவிதை
புவியிற் காணும்
பொருள்கள் யாவும்
கவிதை அழகுக் கவிதை!





# பாவலனாகிடல் வேண்டும்

காலையும் மாலையுங் காரிருள் வேளையுங்
காலம் முழுவதும் வேலை—பயன்
கண்டறி யாதொரு வேலை
சோலி சுரட்டில் நிதமும் மனிதர்கள்
சோர்ந்து தளர்ந்திடும் வாழ்வு—துயர்
சூழ்ந்து வளர்ந்திடும் வாழ்வு!

வஞ்சகம் சூது களவு நிறைந்தவர்
தஞ்சம் பெறுமுல கீதே—அவர்க்
கஞ்சி மறையுது நீதீ
பஞ்சக் கொடுமைகள் சாதிகள் சண்டைகள்
நெஞ்சம் வெடிக்கு தையையோ—புவி
நின்று நிலைப்பது மெய்யோ!

போலி உலகிற் கிடந்து தவித்தது
போதும் அடஇனிப் போதும்—வெறும்
பொய்யிற் புரண்டது போதும்
கோலி மெலிந்து வளைந்தது நல்லுடல்
கொண்ட கவலைய தாலே—உண
வுண்டும் பயனில்லை மேலே!

வாடித் திரிந்தது போதுமிவ் வையக
வாழ்வை யுணர்ந்திடல் வேண்டும்—அதன்
மாண்பை நுகர்ந்திடல் வேண்டும்
தேடித் திரிந்து சிறந்த அமைதியை
நாடி அணைத்திடல் வேண்டும்—மனம்
ஆடிக் களித்திடல் வேண்டும்!

ஓடித் திரிந்துல கத்தின் இயற்கையில்
ஊறித் திளைத்திடல் வேண்டும்—துயர்
ஓடிப் பறந்திடல் வேண்டும்
பாடித் திரிந்து பறந்து சுதந்திரப்
பாவல ஞகிடல் வேண்டும்—புவி
பாலித்து நான்வரல் வேண்டும்!





# எல்லாமென் பாட்டுக்குப் பொருளாக வேண்டும்

நோக்கொன்று வேண்டும்நல்
லுயர்வான நோக்கம்
நுடங்காத உடலத்தி
லுரமொன்று வேண்டும்
ஊக்கம்வேண் டும்பிறரை
ஊக்குவித் தற்காய்
ஒருபோதும் பிறர்மீது
குறைதூற்றிப் பேசா

நாக்கொன்று வேண்டுந்தண்
மொழிபேச வேண்டும்
நாமார்க்கும் குடியல்லோம்
எந்நாளு மென்ற
போக்கொன்று வேண்டும்முற்
போக்காக வேண்டும்
பொழுதெல்லாம் பழுதில்லாப்
பொருளாய வேண்டும்!

கனவெல்லாம் நினைவாகு
மொருகால மென்று
காத்திருந் துழைப்பாலே
முன்னேற வல்ல
மனம்வேண்டும் மாசில்லா
மனமொன்று வேண்டும்
மகிழ்வெய்தி எண்ணங்கள்
மலைகட்டி யோங்க
அனலென்ன புனலென்ன
அடுத்துள்ள தென்ன
ஆற்றலா லைம்பூதச்
சாற்றையும் சேர்த்துப்
பனைபோல வரண்டுள்ள
நெஞ்சிலும் ஊன்றும்
பாட்டுக்கள் நான்பாடப்
பாரோங்க வேண்டும்!

அறிவென்ன அருளென்ன
ஆள்கலைக ளென்ன
அரும்பென்ன துரும்பென்ன
யானைமற் றென்ன
நிறைவென்ன குறைவென்ன
நிழல்வெயி லென்ன
நெல்லென்ன புல்லென்ன
நெருஞ்சிமுள் ளென்ன
மறைவென்ன வெளியென்ன
மலர்கின்ற வியற்கை
மாண்போடு மானிடர்
செயற்கையுஞ் சேர்ந்தே
இறைவன்ற னியக்கத்தி
லென்னென்ன வுண்டோ
எல்லாமென் பாட்டுக்குப்
பொருளாக வேண்டும்!



# 2 ஊறித் திளைத்தவை

6. ஓருருவம் ஒளியுருவம்

7. இயற்கைக் கவிகள்

8. கவிதைக் கன்னிப் பரிசு

9. விந்தை அமைதி நிலவுதே

10. பிறந்தன சிறந்தநற் கவிதைகளே



# ஓருருவம் ஒளியுருவம்

இயலிசையிற் கிளிகுயில்கள்
நாடகத்தில்
இனியமயிற் சோலைவள
நுணுவி லூரின்
வயல்வெளியின் பருவவெழில்
தண்ணென் காட்சி
வரம்பினுயர் பூக்குளங்கள்
வழங்கும் பாட்சி

அயலழகுப் பனங்கூடல்
காட்டும் மீட்சி
ஆனைமுகன் செலுத்துமருள்
ஆட்சி யென்றே
செயல்மறந்து திளைத்தின்புற்
றென்றி மூழ்கித்
தெவிட்டாத தறுதலையாய்த்
திரிந்த காலை—

ஓருருவம் ஒளியுருவம்
ஒருநாள் வந்தென்
னுள்ளுணர்வைத் தெருட்டியருள்
ஊற்றென் றூன்றக்
கார்முகிலாய்க் கோடைமுகில்
மாற்றங் கண்டு
கனத்தமழைக் கடல்பொழியக்
காலம் வந்த
நீர்மைதனைப் போலமிகக்
கனிந்து நெஞ்சம்
நின்றுண்மை விளக்கத்தில்
நேராய்ப் பார்க்கும்
பார்வையினிற் படுகின்ற
ஒவ்வொன் றுள்ளும்
பலகவிதைப் பொருள்வெளிக்கக்
கண்டே னம்மா!

கோழைமனங் கொட்டுண்டு
போன தென்னே
கும்பிட்டு யான்பெற்ற
நிதிய மென்னே
வாழவருள் வார்த்தென்னை
மயக்கி ஞான
வார்மடியில் இழுத்தேற்றி
மாசு நீக்கி
ஆழவுள யாவுமுணர்ந்
தறிய வல்ல
ஆனைமுக மானபொரு
ளமுத மூட்டி
ஏழையினை யாட்கொண்ட
விந்தை யென்னே
எனையுமொரு கவியாக்கி
யேற்ற தென்னே!

செல்லாத தீவினைகள்
சென்ற தென்னே
தெரியாத பொருள்கள்பல
தெரிந்த தென்னே
பொல்லாத புன்னெறிகள்
போன தென்னே
புதியதொரு புவியிலெனை
விட்ட தென்னே

எல்லோரும் எழுச்சிபெற
வளர்ச்சி காண
ஏற்றமுடன் இடரின்றி
இனிது வாழச்
சொல்லாரப் பொருளாரச்
சுவைக ளூறத்
தொடர்ந்துமனந் தூயகவி
சுரந்த தென்னே!





# இயற்கைக் கவிகள்

ஆழக் கடலலை ஆர்த்துக் கரையினில்
　　ஆயிரம் பாட்டிசைக்கும் - அந்த
ஆழிக் கவிகளி லாடி மகிழ்ந்துள்ளம்
　　ஆழ்ந்து திளைத்திருக்கும் !

கொள்ளை மலர்கள் குலுங்கிச் சிரிக்கையிற்
　　கொப்புளிக்குங் கவிதை - அந்தக்
கள்ளில் விழுந்து கவலை மறந்துள்ளங்
　　காவடி யாடிநிற்கும் !

மாலைக் கதிரவன் வானிற் பலப்பல
மாயம் புரிகையிலே - செழுங்
கோலக் கவிதைகள் கொஞ்சி வருமுள்ளங்
கூடிக் கலந்திருக்கும்!

வானத்து நெற்றியிற் சந்தனப் பொட்டென
வந்திடும் வட்டநிலா - தெளி
தேனொத்த பாட்டுத் தெளிக்கும தில்மனந்
தெய்வந் தெளிந்திருக்கும்!

துள்ளிக் குதிக்கு மருவித் துடிப்பினில்
தூய கவிசொரியும் - அதை
அள்ளிக் குடித்துப் பிறந்த பயனடைந்
தாவி குளிர்ந்திருக்கும்!

விண்ணைத் தழுவும் மலைவிளிம் பில்மழை
வில்லெழுந் தோங்குகையில் - அரும்
வண்ணக் கவிதை வளர்ந்து மடியினில்
வானுலகம் படைக்கும்!

அம்மவி யற்கையி யற்றுங் கவிகளில்
ஆடிக் களிக்கையிலே - வரும்
இம்மை மறுமையின் பங்களை யான்பெற
என்ன தவம்புரிந்தேன்!



# கவிதைக் கன்னிப் பரிசு

நெஞ்சைக் கருவொன் றீர்க்கிறது
நினைவில் நாளாய்ப் பூக்கிறது
பஞ்சும் இரும்பா யாகிறது
பருவம் எய்த நோகிறது.

6

துடித்தேன் நெஞ்சைத் திறப்பதற்குத்
துள்ளித் திரியப் பறப்பதற்கு
வெடித்தே விடும்போல் இருக்கிறது
வென்றாள் சூழல் சிரிக்கிறது.

வந்தாள் கண்டாள் வரச்சொன்னாள்
மயங்கிக் கன்னந் தரச்சொன்னேன்
தந்தாள் தழுவிப் படர்கின்றாள்
சரிவா என்றாள் தொடர்கின்றேன்.

காலை மாலை கலையூறும்
சோலைக் கோல மலையேறிப்
பாலைத் தேனை வார்க்கின்றாள்
பழச்சா றமிழ்தில் ஆர்க்கின்றேன்!


கட்டாய்க் கட்டாய் அவிழ்க்கின்றாள்
கதைகள் கண்ணாற் குவிக்கின்றாள்
சிட்டாய் ஆடிச் சிரிக்கின்றாள்
செழிக்கும் அழகை விரிக்கின்றாள்!

அடடா! அடடா! வெறியேறி
அடியோ டென்னை மறக்கின்றேன்
கடலா நிலமா வளிதீயா
கனவா நினைவா தெளிவெய்தி—

பெற்ற கவியைப் படிக்கின்றேன்
பெயரைப் பெறநான் துடிக்கின்றேன்
கற்றோர் கையில் தருகின்றேன்
கவிதைக் கன்னிப் பரிசென்றே!



# விந்தை அமைதி நிலவுதே



எத்தனை எத்தனை வேலைகள்—நிதங்
குத்தி முறிந்திடுஞ் சோலிகள்
அத்தனை யும்வெறும் போலிகள்—பய
னற்ற பெருந்துயர் மூலிகள் !

விட்டு விலகி இயற்கையில்—ஒரு
சொட்டுப் பொழுது திளைக்கையில்
மட்டில் மகிழ்வு பிறக்குது—மனச்
சிட்டுக் குருவி பறக்குது!

வானம் அளந்து வருகுது—மழைத்
தேனில் விழுந்து புரளுது
தானன்னத் தானன்னத் தானனே—எனத்
தாளமிட் டாடிக் களிக்குது!

துள்ளுது தொங்குது தாவுது—சிற
கள்ளி அடித்தெழக் கூவுது
வள்ளல் முருகன் மலரடி—கண்ட
வள்ளியைப் போலச் சிலிர்க்குதே!

நின்ற நினைவு வலுக்குது—அதில்
ஒன்றி உணர்வு கலக்குது
துன்று மடையுந் திறக்குது—துள்ளித்
தூய கவிதை பிறக்குது!

முந்தும் அழகு நிறைந்தவோர்—கவி
வந்து பிறந்து சிறந்ததும்
சொந்தச் சுகத்திற் குலவுமோர்—தனி
விந்தை அமைதி நிலவுதே!



# பிறந்தன
# சிறந்தநற்
# கவிதைகளே!

கோடையின் வெங்கதிர்
குடித்திடத் தண்கடல்
கூடுவிட் டாவியில் நீர்எழவே
கூடின விரிந்தன
கூரையிட் டேமுகிற்
கூட்டங்கள் கொள்ளையிற் கூடினவே !

வானத்தி லோர்கலி
யாணத்தைப் போற்பல
மாட்சிகள் காட்சிகள் ஆயிரமே!
தானனன் ஞனனத்
தானனன் ஞனனத்
தாளங்கள் மேளங்கள் ததிங்கிணத்தோம்!

வானவில் மணவறை
மாப்பிள்ளை வரவினை
வாழ்த்தி வளர்ந்தெதிர் பார்த்திருக்கோ?
மேனகைப் புன்னகை
போலப்பின் வாங்கிடும்
வெயிலுஞ் சிறந்து மறைந்ததுவே!

மேவின மோதின
தாவின தழுவின
மின்னின முழங்கின மேகங்களே!
ஆவினம் வீடுகள்
ஓடின ஆடின
அடர்வன வெட்டையில் மயிலினமே!

திரண்டன குவிந்தன
சேர்ந்தன செறிந்தன
திடுக்கிடத் திடுக்கிட இடிஇடித்தே
வெருண்டன விலங்குகள்
மிரண்டன பறவைகள்
சுருண்டன பாம்புகள் சுண்டெலிகாள்!


இருண்டதி ராவென
இறங்கின மேகங்கள்
இழிந்தன இரைச்சலிற் பொழிந்தனவே!
புரண்டது போதிய
வெள்ளமப் புடைவையைப்
பூமகள் போர்த்தனள் ஆர்த்தனளே!

செழித்தன காடுகள்
சிரித்தன சோலைகள்
கொழித்தன இன்னிசை குருவிக்குழாம்!
கொழுத்தது மனைவளம்
கொஞ்சினர் காதலர்
குழந்தைகள் ஆடினர் பாடினரே!

பாடு மனமே!

அறமுறை ஓங்கிட
அகங்கள் குளிர்ந்திட
ஆயநற் கலைகளும் வளர்ந்தனவே!
குறைகள் மறைந்தன
குணங்கள் நிறைந்தன
கோயிலிற் பூசைகள் தொடர்ந்தனவே!

கருமுகில் கலைந்தது
கலைமதி தெரிந்தது
கவிஞனின் நெஞ்சமுங் கனிந்ததுவே!
பெருகிட நினைவுகள்
பீறிட உணர்வுகள்
பிறந்தன சிறந்தநற் கவிதைகளே!



# 3 தேறித் தெளிந்தவை

11. நான் பிறந்ததும் ஏதுக்கே
12. பாடு மனமே
13. பாடு நெஞ்சமே
14. பாட்டுப் பாடுவேனே
15. கவிதைக்கழகு பொருளன்று



# நான் பிறந்ததும் ஏதுக்கே

பிறந்ததும் மிகக் கற்றதும் பெரும்
பீடுகொள் கவி பாடவே
சிறந்தசெந் தமிழ்ப் பண்பினைப் புவி
தேர்ந்து போற்றுதல் செய்யவே
செறிந்துவா ழினும் பருந்துபோ லவே
பறந்துமா னிடர் தன்மைகள்
அறிந்துதக் கவை கறந்துமக் களுக்
கானபாட் டுகள் பாடவே!

நிலவுசெய் யணி வகைமிகுந் தெழும்
நேர்த்தி யான கலைகளார்
கொலுவிலே திகழ் கோனெனப் புகழ்
கொள்ளுமோர்பொருள் வல்லதாய்ப்
பொலிவுடன் பெரும் பொறுப்புடன் சுவை
பொங்கியெப் பொழு துந்தரும்
நலம்விளை கவி நல்கிடா விடில்
நான்பிறந் ததும் ஏதுக்கே!

வாழவோர் வழி யின்றியே தினம்
வாடுவார் வளங் கண்டிட
ஏழைமை வர வேது வாகிய
ஏக போக உரிமைகள்
வீழவெந் தும டிந்திடத் தமிழ்
மேன்மை நீதி விளங்கிட
வாழுவான் கவி யாக்கிடே லெனில்
வந்து தோன்றிய தேதுக்கே!

கோழைகள் சிறு குச்சிகள் வெறுங்
கோதுகள் திடங் கொண்டிட
தோழர்கள் துணி வெய்திடப் புவி
தோள்கொடுத் துநின் றுண்டிட
ஊழிவென் றுவி ளங்கிடத் தகும்
ஒப்பிலோம் பொருள் தாங்கியே
ஆழிசூழ் உல கத்தையாள் கவி
ஆக்கிடா துயிர் போக்கிடேன்!

கூச்சலில் வெளிப் பூச்சினிற் களி
கொள்ளுவார் குறிக் கோளிலார்
மூச்சிலார் ஒரு பேச்சிலார் தனி
முத்திரை வரப் பெற்றிலார்
காய்ச்சிரும் பினை வைப்பினும் மரக்
கட்டைபோ லுணர் வொன்றிலார்
கூச்சமுற் றுக்கு டங்கியே திறன்
கொண்டுமோர் புகழ் கண்டிடார்—

யாவரும் விழித் தேயெழுந் துணர்ந்
தான்றவல் லவ ராகியே
மேவுநற் பணி செய்துநம் மவர்
மேன்மைநாற் றிசை யுள்ளவர்
நாவிலே நட மாடவைத் திடும்
ஞாலம்வென் றுநி லைத்திடும்
பாவினு லுல காண்டிலே னெனிற்
பாரிலெய் திய தேதுக்கே!





# பாடு மனமே

பாடு மனமே—கவிதை
பாடு மனமே!

பாடு மனமே—எழுந்து
பாடு மனமே!

கேளா தவருங் கேட்டிடப் பாடு
    கேட்டுத்தி ளேத்துப்பி ழைத்திடப் பாடு
ஆளா தவரு மாண்டிடப் பாடு
    ஆண்டுந லங்கள்பு ரிந்திடப் பாடு

பாடு மனமே—உணர்ந்து
பாடு மனமே!

வாழா தவர்கள் வாழ்ந்திடப் பாடு
    பாழும்வ றுமைதொ லேந்திடப் பாடு
ஏன்ழ யென்ருெரு மானிட னிங்கே
    இல்லேயில் லேயெனத் துள்ளியே பாடு

பாடு மனமே—மகிழ்ந்து
பாடு மனமே!

ஒன்ரு தவரு மொன்றிடப் பாடு
    ஒற்றுமை யோங்கிவ ளர்ந்திடப் பாடு
பொன்ருத் தன்னலம் பொன்றிடப் பாடு
    போட்டியு மேட்டியும் போய்க்கெடப் பாடு

பாடு மனமே—முழங்கிப்
பாடு மனமே!

சாதி சமய வேற்றுமை யில்லைச்
சண்டைக ளாற்பய னுவதொன் றில்லை
நீதி யாவர்க்கு மொன்றெனப் பாடு
நெஞ்சினில் தூய்மைவி ளங்கிடப் பாடு

பாடு மனமே — துணிந்து
பாடு மனமே!

ஆறு தாறென நித்தமும் பாய்ந்தே
அன்புமு றமும்வ ளர்ந்திடப் பாடு
ஊறு நெஞ்சமு மூறிடப் பாடு
உண்மை விளங்கியு யர்ந்திடப் பாடு

பாடு மனமே — அழகாய்ப்
பாடு மனமே!

நில்லா வுலக நீர்மையைப் பாடு
நீங்கமுன் னுற்றுங்க டமையைப் பாடு
எல்லாம் வல்லஇ றைவனைப் பாடு
என்றும்நி லைத்திடு மின்பத்தைப் பாடு

பாடு மனமே — வணங்கிப்
பாடு மனமே!

பாடு மனமே — கவிதை
பாடு மனமே!



# பாடு நெஞ்சமே

பாடு பாடு பாடு நாளும்
பாடு நெஞ்சமே
பண்பு மன்பும் பாரி லோங்கப்
பாடு நெஞ்சமே
பாடு யார்க்கும் பயன ளிக்கப்
பாடு நெஞ்சமே
பச்சை மச்சப் பாட்டு மாளப்
பாடு நெஞ்சமே

நாடு வாழ வேண்டு மென்று
பாடு நெஞ்சமே
நன்மை வந்து கூட வென்று
பாடு நெஞ்சமே
கூடி வாழ வேண்டு மென்று
பாடு நெஞ்சமே
கொள்கை யொன்று வேண்டு மென்று
பாடு நெஞ்சமே!

உண்மை வாழ நேர்மை யாளப்
பாடு நெஞ்சமே
ஒன்று பட்டு நின்று வெல்லப்
பாடு நெஞ்சமே
பெண்மை போற்றி போற்றி என்று
பாடு நெஞ்சமே
பிள்ளை குட்டி வாழ்வ தற்குப்
பாடு நெஞ்சமே
திண்மை வெல்க வெல்க வென்று
பாடு நெஞ்சமே
செய்கை யாவும் செம்மை யாகப்
பாடு நெஞ்சமே
வண்மை வாழ்க வாழ்க வென்று
பாடு நெஞ்சமே
வறிய மக்கள் வாழ்வு காணப்
பாடு நெஞ்சமே!

மண்டி யிட்டுக் கெஞ்சு வோரைச்
சாடு சாடுவாய்
மான வாழ்வு வேண்டு மென்று
பாடு பாடுவாய்
அண்டி வாழும் அற்பர் தம்மைச்
சாடு நாளுமே
ஆண்மை வாழ்வு வேண்டு மென்று
பாடி ஆளுவாய்
சண்டை யிட்டு மாளு வோரைச்
சாடி நீக்குவாய்
சாந்தி வாழ்வு வேண்டு மென்று
பாடி ஆக்குவாய்
தொண்டு செய்து வாழு வோரைத்
தூண்டு நெஞ்சமே
தொல்லை யின்றி மக்கள் வாழப்
பாடு நெஞ்சமே!

தூய நெஞ்சுந் துணிவுங் கொண்டு
பாடும் பாட்டிலே
தொல்லை போக்கிச் சுகத்தை யாக்கிப்
பாடும் பாட்டிலே
பாயு மாற்றைப் போலப் பொங்கிப்
பாடும் பாட்டிலே
பக்கு வத்தைப் பெற்றுப் பாடும்
பண்புப் பாட்டிலே

ஆய நல்ல பொருளைக் கொண்ட
அழகுப் பாட்டிலே
ஆற்றல் ஊட்டி ஆக்க மீய
வல்ல பாட்டிலே
வாய்மை யுள்ள தூய்மை யுள்ள
நல்ல பாட்டிலே
வந்து தெய்வம் நிற்கு முண்மை
பாடு நெஞ்சமே!





# பாட்டுப் பாடுவேனே

பாட்டுப் பாடுவேனே—நின்று
பாட்டுப் பாடுவேனே
　　பாட்டைக் கேட்டுநயங்
　　கூட்டிக் கொள்ளுமன
　　நாட்ட மற்றவொரு
　　கூட்ட மேறியுயர்
பாட்டைப் பாடுவேனே—என்றன்
பாட்டைப் பாடுவேனே?

போற்றிப் பாடுவேனே—சும்மா
போற்றிப் பாடுவேனே
ஆற்ற லார்வமுயர்
கூற்றுக் கொள்கைசெயல்
ஏற்ற மற்றவெறுங்
காற்றுத் தூசிகளைப்
போற்றிப் பாடுவேனே—சிச்சீ
போற்றிப் பாடுவேனே?

தூக்கிப் பாடுவேனே—வீணே
தூக்கிப் பாடுவேனே
ஆக்க மெய்யத்தகு
ஊக்கம் நோக்கமின்றிச்
சாக்குப் போக்குச்சொலுஞ்
சோக்குப் பேர்வழியைத்
தூக்கிப் பாடுவேனே—அந்தோ
தூக்கிப் பாடுவேனே?

வாழ்த்திப் பாடுவேனே—நாவால்
வாழ்த்திப் பாடுவேனே
தாழ்த்தி மற்றவரை
வீழ்த்தி வெல்பவரை
வாழ்த்திச் சூழ்பவரை
ஆழ்த்தி யாள்பவரை
வாழ்த்திப் பாடுவேனே—புகழ்ந்து
வாழ்த்திப் பாடுவேனே?

வேலை யில்லையாமோ—வேறு
வேலை யில்லையாமோ
ஞாலக் கள்ளர்களைப்
போலி வீரர்களை
மேலவர்களென
மாலை சூட்டிவர
வேலை யில்லையாமோ—வேறு
வேலை யில்லையாமோ?





# கவிதைக்கழகு பொருளன்று

காலம் வீணே கழிகிறதா
கவலை வேண்டாம் நன்மனமே
ஆலம் விழுதின் ஆசைமுதல்
அறுகம் புல்லின் அமைதிவரை
கோலக் கவிகள் கொட்டுவதைக்
கொஞ்சும் மொழியிற் கட்டியவை
ஞாலம் போற்ற நாட்டிவிடு
நன்றுன் ஆற்றல் காட்டிவிடு !

உள்ளத் தூறும் உணர்வுகளுக்
குடனே யுருவங் கொடுத்துவிடு
தள்ளிப் போடின் வந்தனவும்
தாமாய்ப் போகுந் தனித்துவம்போம்
வெள்ளப் பெருக்கை வென்றுவரும்
வில்லங் கப்பட் டோடிவருங்
கொள்ளை யுணர்வை யப்படியே
கொட்டிக் குமைத்தல் படுகொலையே!

பொங்கு முணர்வும் மெய்யறிவும்
புணரும் போதில் மிகத்தெளிவாய்த்
தங்கு முண்மை தான்வெளிக்கும்
தன்னம் பிக்கை யுடன்பிறக்கும்
துங்கப் பொருளுக் கேற்றவுயர்
சொற்கள் முந்தும் அற்புதமாய்
அங்கச் செந்நீ ராடிவரும்
அந்தப் பொழுதிற் பாடவரும்!

அந்தப் பாட்டைப் பாடிவிடு
அடடா! அதற்கிப் புவியினிலே
எந்தப் பாட்டு மிணைவருமோ
ஈர்த்துப் பிணைத்து நெஞ்சமதில்
விந்தை யின்ப வெறிபுகுத்தி
வென்றே யாளு மாற்றலுள
வந்தப் பாட்டைப் பாடிவிடு
நந்தா விளக்கா யேற்றிவிடு!

பாட்டுப் பாட வேண்டுமெனிற்
    பாடு பட்டுப் பகலிரவாய்ப்
பாட்டைச் சரிக்கட் டும்பகட்டாற்
    பயனென் றில்லை நன்மனமே
பாட்டுத் துள்ளிக் கெம்பியதன்
    பாட்டிற் பாய்ந்தே வந்திடுமப்
பாட்டை மட்டும் பாடிவிடு
    பண்பும் பயனும் நாடிவரும்!

பொருள்நன் றில்லை யெனமற்றோர்
    புலம்பல் கூடு மெனவெண்ணி
வெருளல் வேண்டா மென்மனமே
    மேலுற் றோங்கிப் பிறந்துவிட
வருமெப் பொருளுங் கவிதைக்கு
    வடிவுப் பொருளா யமைந்திடலாம்
பெருமைப் புலவன் நெஞ்சேறிப்
    பீறுஞ் சேறும் இளநீரே!


மல்லுக் கழகு தோளன்று
    மலருக் கழகு நிறமன்று
வில்லுக் கழகு விசையன்று
    வெற்றிக் கழகு விழவன்று
கல்லுக் கழகு கனமன்று
    கவிதைக் கழகு பொருளன்று
புல்லும் பூண்டும் மிகநல்ல
    பொருளா மாற்றற் புலவர்க்கே!

அருளை யறியா ரருள்காணுர்
அன்பைப் புரியா ரதுகாணுர்
இருளில் மாள்வா ரொளிகாணுர்
இசைவில் லாதார் வழிகாணுர்
பொருளை யறியார் பொருள்காணுர்
பொழியும் புலவன் பொருள்நெஞ்சின்
அருமை யறியார் கூற்றெல்லாம்
அடிமை அழியாக் கவிதைக்கே!

கவிதை யென்று வந்துவிடின்
கட்டும் பொருளுக் கேற்றவுயர்
சுவைகொள் சொல்லே வேண்டுவதாம்
கவிதைப் பொருளெப் பொருளெனினும்
கவிஞ னதனைக் கையாளுங்
கலையாற் காந்தக் கற்பனையாற்
புவியிற் பொன்ரு தென்றென்றும்
புகழோ டிலங்கச் செய்திடுவான்!

அவரை இவரை யடியொற்றி
அதனை இதனை மிகப்பற்றிக்
கவிதை பாடிக் காலத்தைக்
கழித்தல் வீணும் திறங்கொண்டு
புவியில் நின்றன் தனிமாண்பைப்
போற்றும் வண்ணம் நிலைநாட்டக்
கவிதை பாடிக் களிநெஞ்சே
காலம் வென்றே நிலைகொள்வாய்!

வஞ்சங் கொள்ளா துலகியலை
 வடிவாய்த் தேர்ந்து மெய்யுணரும்
நெஞ்சின் நெஞ்சுட் கருவெடுத்து
 நினைக்குந் தோறும் உருவெடுத்துச்
செஞ்சொல் லிசையாள் திருவெடுத்துத்
 திரளும் நயங்கள் பலமடுத்துக்
கொஞ்சுந் துங்கக் கலையுடுத்துக்
 குதித்துப் பாயுங் குலக்கவிதை!



# 4 கூறிக் களித்தவை


16. பாவலர்க் காற்றல் உண்டு

17. பாட்டுக்கு நோக்கமுண்டு

18. பாடுவது எம்பணி

19. பாட்டாவது கேட்டாவது

20. ஈன்றதில் உவந்தேன்

# பாவலர்க் காற்றல் உண்டு

பைந்தமிழ் ஈழ நாட்டிற்
　　பாட்டுக்குப் பஞ்ச மில்லைச்
சிந்தையைக் கவரும் பாட்டுத்
　　திரைகடல் சூழ்ந்து பாட
முந்திநல் முத்துச் சிப்பி
　　விந்தைமீ னினங்கள் பாட
மந்தமா ருதம்போ யுள்ள
　　மலையெலாங் குலவிப் பாட—

மாவலி களனி காலு
வளவைதெய் வீகத் தன்மை
மேவுமா ணிக்க கங்கை
மேலும்பல் லாறு கூடித்
தாவிவீழ்ந் தோடிப் பாய்ந்து
தண்ணெனப் பாடக் கோழிச்
சேவலைக் கேட்டு நாணித்
திருந்திடுங் குயில்க ளென்ருல் —

பார்க்கலாம் பாட்டு ஞானம்
படரடர் காடு மேடு
நீர்க்கரை மரங்கள் சோலை
நிறைந்துறைந் தெழுச்சி பெற்றுச்
சீர்க்கும்புள் ளினங்க ளென்று
சேர்ந்தெலாம் பாடக் கேட்டு
ஆர்க்கின்ற மனிதன் பாடா
தமைவனே ஈழ நாட்டில்?

ஈழத்துப் பூதந் தேவ
னூர்முதல் இன்றைக் குள்ள
வாழத்த குந்த வற்றை
வடிவுறக் கற்ற வற்றின்
ஆழத்தை அறிந்தோ ரெல்லாம்
ஆ! என்ன அருமை என்றே
ஈழத்துப் புலவர் மேன்மை
எடுத்தெடுத் தியம்பு கின்ருர்!

உலகச்செந் தமிழ்மா நாட்டில்
    உயர்வான பரிசில் பெற்றுப்
பலகற்ற அறிஞர் முன்னே
    பாடுமீன் உடைய நாட்டிற்
பொலிகின்ற கவிதை யாற்றல்
    மேன்மையைப் போற்றும் வண்ணம்
நிலைக்கச்செய் தார்கள் உங்கள்
    நிகரற்ற கவிஞர் கண்டீர்!

பாட்டென்றால் விளங்கா தென்ற
    பாமரக் காலம் மாறி
நாட்டில்நற் கவியி லூறும்
    நயங்களைச் சுவைக்க வல்ல
கூட்டத்தார் மிகுந்த தாலே
    கூட்டங்கள் தோறு மின்று
நாட்டிப்பேர் கவிய ரங்கம்
    நற்றமிழ் வளர்க்கின் றார்கள்!

இந்தநல் நிலைமை தன்னை
    எண்ணிநாம் பார்க்கும் போது
செந்தமிழ் மக்கள் தங்கள்
    சீரிளந் தமிழ்த்தாய் மேன்மை
சிந்தையிற் கொள்ள லானார்
    செயல்புரிந் தோங்க லானார்
வந்ததே புதிய வேகம்
    வளருமே தமிழ்த ழைத்து!

நீறில்லா நெற்றி யெல்லாம்
நினைக்கின்பா ழாவ தில்லை
ஊறுநெய் யில்லா எல்லா
உண்டியும் பாழோ இல்லை
ஆறில்லா எல்லா ஊர்க்கும்
அழகுபா ழில்லை யாயின்
கூறுவான் கவிஞ ரில்லாக்
கூட்டங்கள் எல்லாம் பாழே!

அழைத்தவர் அழையா தார்கள்
ஆன்றநற் கவிய ரங்கிற்
பழுத்தநற் புலவோர் பாடும்
பண்புறு கவிகள் கேட்டு
விழித்தெழத் தூய்மை பெற்று
விளங்கிட விரைகின் றார்கள்
மழைத்துளிப் பெருக்கைப் போன்று
மக்களிக் கால மன்றோ!

பெரும்புகழ்க் கவிஞர் பாட்டிற்
பிறந்திடுங் கோடி யின்பம்
கரும்பினைக் காட்டு வார்கள்
கற்கண்டை நீட்டு வார்கள்
விரும்பிடுங் கள்ளை அள்ளி
மிகமிக ஊட்டு வார்கள்
அரும்பயன் நாட்டு வார்கள்
ஆவலைக் கூட்டு வார்கள்!

துரும்பினில் தூண்கள் செய்யுந்
　　துணிவுடை நெஞ்ச முள்ளார்
இரும்பினிற் கரும்பு செய்யும்
　　இனியநற் பண்பு மிக்கார்
விரும்பிடும் பொருளை எண்ணி
　　விதம்வித மாகப் பண்ணும்
பரம்பொரு ளாற்றல் இந்தப்
　　பாவலர்க் குண்டு கண்டீர்!

கவிஞர்கள் பாடக் கேட்டாற்
　　கவலைகள் பறந்து போகும்
புவியிலே வளங்கள் ஓங்கும்
　　புன்மைகள் பழிகள் நீங்கும்
குவியும்நல் லுணர்வி லூறிக்
　　குணமுடைக் கவிஞர் பாடும்
கவியிலோர் ஆற்ற லுண்டு
　　கடவுளின் கோல முண்டே!

கண்ணிலார் ஒளியைக் காண்பார்
　　காதிலார் ஒலியைக் கேட்பார்
மண்ணிலார் மன்ன ராவார்
　　மனமிலார் வள்ள லாவார்
எண்ணியே புலவர் பாட்டுப்
　　பண்ணினுற் புவியில் மக்கள்
விண்ணிலே தேவர் போன்று
　　விளங்குதல் திண்ணங் கேளீர்!



# பாட்டுக்கு நோக்கமுண்டு

களனியின் பெருக்கைப் போன்றுங்
காலியின் விளக்கைப் போன்றும்
வளமலி யாழ்ப்பா ணத்து
மாம்பழச் சுவையைப் போன்றும்
தெளிதிரு வருள்கொ ழிக்குந்
திருமலைச் சிறப்பைப் போன்றும்
உளமிக வார்க்கப் பாடும்
ஒண்புகழ் கவிஞர் கட்கும்—

பாரிலே காந்தி வேதம்
　　பரப்பிடப் பக்தி யோடு
சீரிய சேவை செய்யுந்
　　தியாகியார் அவர்க ளுக்கும்
பேரவை அறிஞர் அன்பர்
　　பீடுகொள் அனைவ ருக்குஞ்
சீரிளந் தமிழ்த்தாய் போற்றுஞ்
　　சிறியவன் நல்வ ணக்கம்.

மேடையிற் கவிதை மாரி
　　விளங்கமுன் ஒன்று சொல்வேன்
கோடையில் நிலத்தை வந்து
　　குளிர்ந்திடச் செய்து பச்சை
ஆடையை அளித்து மண்ணை
　　அழகுறச் செய்து மக்கள்
கேடுகள் தீர்க்க வல்ல
　　ஈடிலா மாரி போன்று—

நாமிவண் துமித்துத் தூறி
　　நலமுறப் பெய்து பின்னர்
சோமழை பொழிந்து கொட்டச்
　　சொக்கியே நீவி ரார்த்துச்
சேமுறக் குளிர்ந்தே உச்சி
　　சிலிர்த்துமெய் உருகி நெஞ்சம்
ஓமிது புகழ்ச்சி யில்லை
　　ஒருமுழம் வளர்வீ ருண்மை!

பாட்டினுற் சொக்க வைத்துப்
பாட்டினுற் கிறுங்கச் செய்து
பாட்டினுல் மயக்கி இங்கோர்
பாட்டிலே நும்மை வீழ்த்திக்
காட்டவா வேண்டாம் இந்தப்
பயனிலாக் கரடி வித்தை
நாட்டிலே நன்மை யோங்கப்
பாடுதல் நமது நோக்கம்.

ஆர்க்கலாம் கவிதை கேட்டே
ஆடலாம் ஆடிப் பாடி
வேர்க்கலாம் விம்மிப் பொங்கி
மெய்ம்மயிர் சிலிர்த்து மேனி
போர்க்கலாம் பரவா யில்லைப்
பொருள்தனைப் புரிந்து கொள்ளா
ஊர்க்கெலாம் நன்மை யில்லா
உருவினுற் கண்ட தென்னே!

குளிர்ச்சிதான் கவிதை கேட்டல்
குளிர்ச்சியால் மேனி யெல்லாம்
கிளர்ச்சிபெற் ருடி யந்தக்
கிளர்ச்சியால் நெஞ்சி லாங்கோர்
எழுச்சியும் தோன்றி யந்த
எழுச்சியால் வாழ்க்கை யோங்கி
வளர்ச்சியு மடையு மென்ற
மகிழ்ச்சியாற் பாடு கின்ருேம்.

அறிவினைத் தீட்டி யுள்ள
அன்பினை யூட்டி நல்ல
நெறிகளைக் காட்டி நீதி
முறைகளை நாட்டி வாழ்வில்
உறுபயன் விளைக்க வல்ல
இறையருள் கூட்டி இன்ப
நிறைபுகழ் நாட்டை யன்றோ
நிறுவநாம் பாடு கின்றோம்!

இரண்டொரு மணித்தி யாலம்
இருந்துநாம் பாடக் கேட்டு
புரண்டுவந் துணர்ச்சி பொங்கப்
புகழ்ந்தெமை வாழ்த்தி விட்டுச்
சுருண்டுபின் படுக்க வேண்டாம்
துடித்தெழுந் தெங்கள் பாட்டில்
திரண்டநற் கருத்தை வாழ்விற்
சிக்கெனப் பிடித்தல் வேண்டும்.

உறைக்கின்ற மிளகாய் கூட
உள்ளதன் தன்மை மாறும்
எறிக்கின்ற வெய்யில் கூட
இளகியே தண்மை காட்டுந்
திறக்காத கதவு கூடத்
திறக்குமெம் பாடல் கேட்டால்
சிறக்காத மனிதர் மட்டுஞ்
சிந்திக்க மறுப்ப ராமோ?

பாட்டுக்கு நோக்க முண்டு
பண்புண்டு சக்தி யுண்டு
பாட்டுக்குள் தெய்வ முண்டு
படித்ததைப் போற்று கின்ற
நாட்டுக்கு நன்மை யுண்டு
நாட்டினுன் இதனை நன்கு
பாட்டுக்கென் றுதித்த தீரப்
பாரதிப் புலவன் கண்டான்!

ஏட்டிலே கிடந்த பாட்டை
வீட்டிலே கொணர்ந்து தந்தான்
கூட்டிலே இருந்த செல்வக்
குழந்தையைத் திறந்து பூட்டை
நாட்டிலே உலவ விட்டான்
நாவிலே குலவ விட்டான்
பாட்டினுற் பாலித் தானே
பாரதி பார தத்தை!

பாமரர் வாயி லெல்லாம்
பாமணம் வீச வைத்தான்
தீமைகள் தம்மைப் பற்றித்
தீயென எரித்துத் தீர்த்தான்
ஊமையர் குருட ரெல்லாம்
உக்கிர விழிப்ப டைந்து
தாமுயர் மனித ரென்று
தலைப்படப் பாடல் செய்தான்.

போட்டிகள் பூச லுள்ள
புன்மைகள் மாள மக்கள்
நாட்டினை ஆள மிக்க
நலமுடன் வாழத் தக்க
பாட்டுகள் பாடி நாட்டிற்
பாவலன் கடமை தன்னைக்
காட்டினன் உலகத் தோர்க்குப்
பாரதிக் கவிஞன் கண்டீர்!

கடவுளின் பான்மை காட்டக்
கனிதமிழ் மேன்மை நாட்ட
மடமைகள் கொளுத்தித் தள்ள
மாண்பினை அணைத்துக் கொள்ளத்
திடநலம் மிகச்சி றக்கச்
சிந்தனை யுடன்பி றக்க
நடைமுறைக் கருத்து மிக்கப்
பாரதி பாடல் நன்றே.

பாரத மாதா வென்றும்
பைந்தமிழ் அன்னை யென்றும்
சீரெழில் அளிக்க வல்ல
சுதந்திர தேவி என்றும்
தாரணி புரக்கும் பெண்கள்
தாய்சிவ சத்தி யென்றும்
பாரதி காட்டுஞ் சக்தி
தத்துவப் பண்பு தேரீர்!

புதுயுகக் கவிஞ னென்றும்
　　புரட்சிசெய் புலவ னென்றும்
விதியினை மாற்ற வந்த
　　விடுதலைக் கவிஞ னென்றும்
பொதுசனப் புலவ னென்றும்
　　புவியினர் போற்றி நாளும்
விதம்வித மாக ஏற்றும்
　　பாரதி மேன்மை வாழ்க!



# பாடுவது எம்பணி

வான்புகழ் வள்ளு வர்க்கு
மாத்தளை இளைஞர் மன்றம்
ஊனுயிர் உய்ய வல்ல
ஒப்பிலா விழாவெ டுத்தார்
வான்சிறப் பிற்சி றந்த
மாத்தளை மக்கள் மேன்மைப்
பான்மையைக் காட்டு மிந்தப்
பைந்தமிழ் விழாவில் வந்தே—

கவிதைகள் பாடு மென்றார்
    கலைமகட் செல்வ ரிங்கே
அவையினர் முன்ன மர்ந்தார்
    அவர்திறன் அறியார் யாரோ
இவண்முனர் பார திக்கென்
    றெடுத்தபேர் விழாவில் மேன்மைக்
கவிகளால் எல்லோர் நெஞ்சும்
    கவர்ந்தபேர் வழிக ளன்றோ?

விதம்வித மாக வள்ளு
    வன்பொருள் விளக்கிக் கேட்கும்
விதம்வித மான பேரைப்
    பதம்பெறச் செய்ய வல்ல
சுதந்திரக் கவிஞர் பாட்டின்
    சுவைகளைக் கொண்டு வந்து
குதங்குத மாக வைப்பர்
    கொடுத்துவைத் தவர்கள் நீங்கள்!

இனியநற் கவிகள் வாணி
    இன்னருள் செய்ய நன்கு
கனிபவர் கவிஞர் மாறாய்க்
    கரும்புளி மரத்தில் வாழும்
முனிகளென் றஞ்சி மெள்ள
    முணுமுணுப் பதுவும் பச்சைப்
பனியரிக் கவிஞ ரென்றே
    பறைவது மறிவோம் நாமே!

பனியர்தான் உண்மை வெங்குப்
　　பனியர்தங் கண்க ளுக்குப்
பனியர்போல் தெரிவோம் பண்பைப்
　　பழித்திடும் பேயர் முன்னால்
முனியெனக் குதித்தி ரத்தம்
　　மூக்கினால் வரவுஞ் செய்வோம்
இனியரென் றறிவார் நெஞ்சில்
　　இருந்துநாம் இன்பஞ் செய்வோம்!

அறிஞருக் கறிஞ ராவோம்
　　அரசருக் கரச ராவோம்
வறியவர் தமக்கு வாழ்வு
　　வகுத்திடும் அமைச்ச ராவோம்
வெறிகொளும் வீண ருக்கும்
　　விழல்புரி விசர ருக்கும்
அறிவெனும் மருந்தை ஏற்றும்
　　அசல்வைத் தியரு மாவோம்.

ஒருசெய்தி உணர வேண்டும்
　　உண்மையே ஒன்று மில்லாப்
புரியாத பொருளை நாங்கள்
　　ஒருநாளும் புனைவ தில்லை
தெரியாத வற்றை நன்கு
　　தெளிவாக்கி உங்கள் வாழ்வைச்
சரியாக வைப்ப தற்கே
　　சலியாது பாடு கின்றோம்.

காதலைப் பாடி லென்ன
சாதலைப் பாடி லென்ன
ஆதியைப் பாடி லென்ன
அண்மையைப் பாடி லென்ன
சோதியைப் பாடி லென்ன
துரும்பினைப் பாடி லென்ன
ஏதுநாம் பாடி னாலும்
எண்ணம்உம் ஏற்ற மையா!

ஆற்றிலே மூழ்கி லென்ன
அறுகிலே தடக்கி லென்ன
சேற்றிலே வீழி லென்ன
சேரியை நோக்கி லென்ன
காற்றிலே மிதக்கி லென்ன
கவிவெளி கலக்கி லென்ன
மாற்றமாம் வைய கத்து
மாந்தரின் வாழ்வு நோக்காம்.

கனியாக இனித்த போதும்
வேம்பாகக் கசந்த போதும்
பனியாகக் குளிர்ந்த போதும்
தீயாகப் பகைத்த போதும்
தனியம்பாய்த் துளைத்த போதும்
தென்றல்போல் தழுவும் போதும்
நினைவொன்றே யார்க்கு மிங்கு
சரிநீதி நிலைக்க வேண்டும்.

ஆயினும் ஒன்று சொல்வேன்
　　யாரெதைப் பாடி னாலும்
மாயிரு ஞாலம் போற்றும்
　　வள்ளுவர் கருத்தை யெல்லாம்
ஆயநல் லறிஞர் கூடி
　　அழகுற விளக்கி னாலும்
போயவை கேட்டு வாழ்வைப்
　　புதுக்கிடும் நோக்க மில்லாப்—

பேயர்கள் தமிழர் பண்பு
　　பிழையுறு மாறு சாய்ந்தாற்
சாய்கிற பக்கமே போய்ச்
　　சாயுஞ்செம் மறிகள் போன்று
தேய்கிறார் நினைத்த பாட்டில்
　　திரிகிறார் ஏதோ வுள்ள
வாய்வயி றோடு மட்டும்
　　மாய்கிறார் சந்த திக்கென்—

ஆவன செய்தற் கான
　　அக்கறை சிறிது மில்லார்
மேவன செய்து வாழும்
　　வேறொரு கூட்டத் தாரைத்
தேவரென் றிகழ்ந்தார் தெய்வப்
　　புலவரிக் கயவர் செய்யுஞ்
சேவைகள் குறித்து நன்கு
　　சிந்திக்க வேண்டு கின்றேன்.

திருக்குறள் பெற்ற பின்னுந்
　　திருந்தினே மல்லோ மையா
செருக்குகள் தீர வில்லைச்
　　சிறுமைகள் போக வில்லை
இரக்கமும் பெருக வில்லைச்
　　சுருக்கமாய்ச் சொல்லப் போனல்
இருக்கிறேம் இருந்த வாறே
　　ஆண்டிரண் டாயி ரங்கள்!

அலகிலா ஒழுக்க சீலர்
　　அமுதவள் ளுவனு ரிந்த
நிலமெலா ஏத்து மான்ற
　　நீதிமான் நியாய வாதி
உலகியல் ஞானி எங்கள்
　　ஊனுயிர் கலந்து நிற்கும்
திலகமா முனிவர் தெய்வப்
　　புலவனுர் வாழ்க்கைச் சிற்பி—

ஆதிமே லாய்வ ளர்ந்த
　　அற்புதத் தமிழர் பண்பை
வேதமாய் விளக்கி வைத்தார்
　　விழிகளில் ஒற்றிப் போற்றித்
தீதிலா வாழ்க்கை கண்டு
　　தேவராய் விளங்கி னேமா
ஏதுநாம் செய்து விட்டோம்
　　ஏமாற்றி வாழ்ந்து விட்டோம்!

மன்னுசொல் வள்ளு வர்க்கே
  வைத்தநம் மதிப்பீ தென்றூற்
சின்னவர் எங்க ளுக்கா
  செவிசாய்க்கப் போகின் றீர்கள்
என்னவோ ஐயா பாடு
  வதெம்பணி உன்னிக் கேட்டு
நன்னெறி தழைக்க வாழ்தல்
  நும்பணி நலமே செய்வீர்!

கேட்டாலு மென்ன கேளா
  விட்டாலு மென்ன கெம்பி
நாட்டாத வளர்ச்சி நாட்டி
  நல்லறம் நிலைக்க நம்பண்
பாட்டான மலையி லூறிப்
  பாய்ந்தோடும் நாளும் எங்கள்
பாட்டாறு போற்றி செய்து
  பயனீட்டல் உங்கள் பாடே!

திருக்குறள் தன்னை விட்டுப்
  புதுக்குறள் தேடி வந்து
குருக்களென் றோதும் பேதைக்
  'குஞ்சு'கட் கொன்று சொல்வேன்
பொருக்கினை அள்ளிப் பூசிப்
  புழுத்தலைப் புலைய ராகி
உருக்குலைந் தொழிய வேண்டாம்
  உருப்பட வேண்டு கின்றேன்.

வெண்ணெய்கை நிறைந்தி ருக்க
    வீடுவீ டலைய லாமோ
கண்ணெதிர் கரும்பி ருக்க
    இரும்பினைக் கடிக்க லாமோ
விண்ணுயர் சுடர்வி ளங்க
    மன்மினி போற்ற லாமோ
தண்ணருட் குறளி ருக்கத்
    தற்கொலை புரிய லாமோ?

பெற்றதாய் தந்தை யாகிப்
    பீடுகொள் குருவு மாகி
உற்றசீர் மனைவி யாகி
    உன்னத நண்ப ராகிப்
பற்றுசெய் தொண்ட ராகிப்
    பாலிக்குந் தெய்வ மாகிச்
சுற்றியே தேவை நோக்கிச்
    சுகந்தரும் முப்பால் காணீர்!

மாமறை நூலை விட்டால்
    வாழ்க்கைக்குத் தஞ்ச மில்லை
நாமுணர் பொருள்க ளெல்லாம்
    நவிலுயர் களஞ்சி யத்தைக்
காமுறு கற்ப கத்தைக்
    கலங்கரை விளக்கந் தன்னைக்
காமதே னுவைப்பே ரூற்றைக்
    கவலைதீர் மாம ருந்தை—

தனிப்பெருந் தமிழர் சொத்தைத்
தன்மான வாழ்க்கை வித்தை
அனைத்துல கத்தா ருக்கும்
ஆக்கமா யமைந்த முத்தை
நினைப்பரும் வேத வாக்கை
நிகரிலா இலட்சி யத்தை
இனித்தனும் பயன்ப டுத்தி
எழுச்சிபெற் றோங்கி வாழ்வீர் !

# பாட்டாவது கேட்டாவது

இன்பக் கவிப் பொங்கல் படைத்
தெங்கும் புகழ் பெற்ற
அன்புக் கவி வாணர் சுவை
ஆளும் அறி வாளர்
துன்பங் கெடும் பாட்டால் நலத்
தென்பைப் பெறச் சூழும்
அன்பர் அனை வர்க்கும் பணி
வான வணக் கங்கள்.

இட்டுத் தலைப் பொன்றை யதிற்
கட்டுங் கவி யென்றார்
சட்டப் படி புட்டுப் பொருள்
ஒட்டிக் கவி வாணர்
சுட்டுக் கவி தருவா ரெனச்
சொல்லே னிவர் மிக்கச்
சுட்டித் தனங் கொண்டார் ஒரு
சொல்லைத் தனுங் கேளார்.

இதிலே கவி செய்க வெனின்
எதிலோ பொழி வார்கள்
மதுரை நகர் பாடீ ரெனின்
குதிரை விடு வார்கள்
அதியற் புத வாற்றல் மிகு
வரும் பாவலர் தம்மை
மதியால் வெலக் கூடும் எனின்
விதியால் முடி யாதே!

கட்டுப் பட மாட்டா ரிவர்
கெட்டித் தனங் கொண்டார்
குட்டை குளம் விட்டால் விரி
வெட்டை வெளி நிற்பார்
பட்டி யடைத் தாலுந் தனிச்
சிட்டாய்ப் பறப் பார்கள்
மட்டில் திறம் மிக்கார் சுவை
சொட்டக் கவி சொல்வார்.

எந்தத் தலைப் பேனும் வருஞ்
சொந்தப் பொருள் மீதே
விந்தைக் கவி செய்வா ரதை
முந்தும் விருப் போடு
வந்திவ் வவை யேறி மிக
வடிவாய்ப் பொழி வார்கள்
இந்தப் பிறப் புற்ற பயன்
இன்றே யடை வீரே!

ஆட்டம் பல ஆடிப் பலர்
அந்தோ நிலை கெட்டார்
கூட்டம் பல கூடிப் பலர்
கொட்டா விகள் விட்டார்
வேட்டை பல ஆடிப் பலர்
வெறுங்கை யுடன் மீள்வார்
தேட்டம் பல தேடிப் பலர்
சிறுவாழ் வுடன் மாள்வார்.

பேட்டுச் செயல் சேட்டைக் கதை
நாட்டும் பய னில்லை
நாட்டில் துயர் வீட்டில் துயர்
நாளும் பல தொல்லை
ஆட்டுங் கலி யென்பா ரதை
யார் வெல்பவ ரென்றே
பாட்டிக் கதை பேசித் தினம்
பஞ்சிக் கடல் வீழ்வார்.

போட்டிச் செயல் நன்றே யெனின்
　　பூசல் பய னாகும்
தீட்டும் நலத் திட்டம் வரின்
　　தீராத் தடை யாகும்
ஈட்டும் பயன் ஒன்று மெனின்
　　ஆட்டுந் துயர் கோடி
நாட்டும் பயன் நன்றே அது
　　நாளை வரை யுண்டோ?

வாட்டுந் துயர் தம்மைப் பலர்
　　ஓட்டும் வழி கண்டோம்
வீட்டுக் குறிப் புச்சா தகம்
　　வேப்பங் குளைப் பெல்லி
கூட்டுக் குரு விச்சாத் திரம்
　　கூரை வளர் பல்லி
நீட்டிக் கரங் காட்டல் பினர்
　　நினைத்தஞ் சனம் பார்த்தல்.

மோட்டுச் செயல் சாட்டுக் கதை
　　படியா தவர் முறைகள்
வாட்டங் கெட வழிகாட் டிய
　　வரலா றுகள் உண்டோ
கூட்டி மடக் கொள்கை களைக்
　　கொட்டி நெருப் பிட்டுத்
தீட்டும் மதி வாணர் நெறி
　　சேர மனம் வைத்தே—

பாட்டா வது கேட்டா வது
　　பார்க்கத் துணிந் தீரே
பாட்டால் வரும் நன்மை இவண்
　　பாடி முடி யாது
காட்டுந் தமிழ் நூல்கள் அவை
　　கற்றுத் தெளி வெய்தி
வீட்டில் விளக் கேற்றும் வரும்
　　வெற்றி உயர் வெற்றி!

தீதிற் கவி வாணர் மொழி
　　கேட்கத் திரண் டீரே
போதும் இனி உய்வீர் துயர்
　　ஏதும் அணு காதே
காதுக் கினிப் பூட்டுங் கவி
　　கருத்துக் குயி ரூட்டும்
நீதி நெறியாளுங் கன
　　வெல்லாம் நினை வாகும்.

— வேறு —

பாட்டினைத் தனித்தி ருந்து
　　படித்திட லின்ப மானுற்
பாட்டினைக் கனிந்த மேன்மைப்
　　புலவனே வந்து பாடக்

கேட்டிடல் அதனி லின்பங்
கிடைத்திடாப் பெரிய பேறு
பாட்டதன் உயிர்த்து டிப்பை
ஊட்டவந் துள்ளார் பாரீர்!


பாடுதற் காற்றல் வேண்டும்
பக்குவப் பார்வை வேண்டும்
கூடுவான் உலக ஞானங்
குறைவிலா தொளிர வேண்டும்
பாடிய பாட்டை வந்து
பலதிறப் பட்டோர் முன்னே
மேடையில் நின்று பாட
வேறும்பல் லாற்றல் வேண்டும்.

சூடிக்கொள் புலமை யாற்றல்
சொல்லாட்சி யிவைக ளோடு
மேடைக்குத் துணிவு வேண்டும்
மேலான தொனியும் வேண்டும்
ஆடிக்கூழ் போன்று பாடும்
பொருளுமோ அரிதாய் வேண்டுங்
கூடிக்கேட் டிருப்போர் நெஞ்சைக்
கொள்ளைகொள் நடையும் வேண்டும்.

உங்கள்முன் வீற்றி ருக்கும்
 ஒப்பில்லாப் புலவர் மேன்மை
இங்கென்ஞல் எடுத்துச் சொல்லி
 முடியாதே அரங்கி லேறி
எங்கெங்கு பாடி ஞலும்
 அங்கங்கு புகழ்ச்சி மாலை
பொங்கும்பா முழக்கத் தாலே
 பொலிவூட்டிப் புரக்கும் மேலோர்.

இத்துணைப் பெருமை வாய்ந்தோர்
 எழுந்திங்கு பொழியும் போது
முத்திரைக் கடிதத் துக்கு
 முன்ஞலே அத்தான் தோன்றச்
சித்திரப் பாவை துள்ளிச்
 சிலிர்த்தெழுந் தார்த்தல் போன்று
மெத்தவே களித்து வாழ்க்கை
 விளக்கமும் பெறப்போ கின்றீர்!

இடையிலே யினியும் நிற்றல்
 எனக்கழ கன்று பாட்டுக்
கொடைவளச் செல்வர் எங்கள்
 குலமதன் கண்கள் நாட்டைப்
புடமிடுந் தொண்டர் வாக்குப்
 பலித்திடுஞ் சித்தர் போற்றுங்
கடல்மடைக் கவிஞர் உங்கள்
 காதலர் பொழிவார் கேளீர்!



# ஈன்றதி லுவந்தேன்

**1**

கவிய ரங்க மென்று சொல்லிக்
காண நண்பர் வந்தனர்
தவறி டாது வருக வென்று
தலைப்புந் தந்து சென்றனர்

அவர்கள் கூட்டத் துக்கு நாட்கள்
அதிக மின்னு மிருந்ததால்
அவதி யின்றிப் பொறுத்து நல்ல
கவிதை பாட எண்ணினேன்.

அமைதி சூழ்ந்த வரிய நாளில்
அகம கிழ்ந்து காலையே
அமையு மான கவிதை யென்று
அடுக்குப் பண்ணித் தொடங்கினேன்
திமித மிட்டு மக்கள் செய்யுஞ்
சில்லி யோசை செவியிலே
கமக மென்று மனைவி யாக்குங்
கறியின் வாசம் மூக்கிலே!

பல்லி யொன்று பூச்சி மீது
பாயுங் காட்சி கண்ணிலே
அல்ல லூற்றுத் துடிது டிக்கும்
அந்தப் பூச்சி நெஞ்சிலே
மெல்ல வந்து தொத்தித் தொங்கி
வீழும் பையன் தோளிலே
நல்ல பாட்டு நானி யற்ற
வல்ல வேளை காற்றிலே!

## 2

மற்ருேர்நாட் கீரி
  மலேக்கோடிச் சென்றேன்
  மடமொன்றின் பின்ஞல்
  நெடுந்திண்ணே மீது
சற்றேபோய்க் குந்திச்
  சப்பாணி கொட்டித்
  தகவான சூழல்
  தனிலான பாடல்
பெற்றேக வேண்டும்
  பிழைக்காதின் றென்னும்
  பெருநோக்கத் தோடு
  விரிவான மெங்குஞ்
சுற்ருமற் சுற்றிச்
  சோர்வுற்று வீழ்ந்தோர்
  சொல்லேனும் வந்து
  தோன்ருது நிற்க—

விறைத்துக் காலொன்று
  வில்லென்றி முக்க
  வில்லங்கப் பட்டு
  விடுவித்தெ ழுந்து
நிறுத்திப்பா வேலே
  நீட்டிப்போர்க் காலே
  நின்றும்ந டந்தும்
  நிலேமைசீ ராக்கிக்

குறித்துள்ள பொருளிற்
    குணமான பாட்டுக்
    குதிக்காது போகப்
    பதைக்காது நானும்
பொறுத்துள்ள கொக்கைப்
    போற்காத்து நின்றும்
    விறுத்தமீ ஞென்றும்
    வெளியாக வில்லை!

வற்றாத ஊற்று
    வடிவாய்க்கி ணற்றில்
    வருமட்டுந் தோண்டும்
    வல்லாளர் போன்று
முற்றாக நானும்
    மூச்சாக நன்கு
    முனைந்தங்கு நின்றும்
    முடிவொன்று மில்லைச்
சற்றேயத் திண்ணை
    தனிற்சாய்ந்து விட்டேன்
    சட்டென்று யாரோ
    தட்டத்தான் மெள்ளப்
பெற்றேனங் குணர்வு
    பிழையில்லைத் தூக்கம்
    பேசாமல் வீடு
    பெரிதென்று மீண்டேன்!

## 3

இரண்டுநாள் மட்டு மின்னும்
　　இருந்தன கூட்டத் துக்குச்
சுரண்டியென் னேர முண்ணுந்
　　தொடர்பள்ளி வேலை தன்னைச்
சுருண்டுநான் செய்யும் வேளை
　　துள்ளியே நெஞ்சி லேதோ
அருண்டதங் ககல வேலை
　　ஆர்த்துடன் பாட லானேன்!

என்னப்பா வந்து பையன்
　　எம்மட்டு நேர மாக
முன்னுக்கே நின்று கொண்டு
　　மூச்சைவிட் டழுகின் றுன்நீர்
என்னென்றுங் கேட்டி டாது
　　என்னசெய் கின்றீர் ஓகோ
மன்னிக்க வேண்டும் வாடா
　　மாகவி மகனே யென்ன —

முடிகின்ற தினிய பாடல்
　　அடியழிக் கின்ற கூந்தல்
படிசொல்லுத் தவறு வென்றன்
　　பாவையே வருக வென்றேன்

விடுமுந்தப் பேச்சை விட்டு
வெளியிற்போய்க் கொட்டு கின்ற
இடிமின்னல் மழையைப் பாரும்
அட! என்ன மழையா நன்று—

அன்றைக்குப் பெய்வ தற்கென்
றருக்கட்டி விட்டுப் பெய்யா
தின்றைக்க சுக்கி டாமல்
இறைக்கின்ற திதனை வேண்டி
என்றைக்குப் பெய்யு மென்றே
யிருந்தவர் மகிழ்வ ரன்றோ
இன்றைக்கு நல்ல நாளே
இனிச்சற்று வயிற்றுக் கீவோம்!

## 4

கூட்டத்திற் சென்று பாட்டைக்
குணமுடன் படித்து நின்றேன்
கேட்டவர் தாங்கள் பெற்ற
கிளர்ச்சியைக் கரங்கள் தட்டிக்
காட்டினர் முடிவி லாங்கு
கவிதையை வேண்டிக் கைகள்
நீட்டுவார் ஆர்வங் கண்டு
நெஞ்சுவிம் முற்று நின்றேன்!

ஊன்றியும் பாடல் கேட்டோம்
உவந்தன முயர்ந்த துண்மை
ஆன்றநற் பொருள்க ளென்றும்
அரியசொல் நயங்க ளென்றுஞ்
சான்றவர் கூறிச் சூழ்ந்து
தனித்தனி புகழ வென்னுள்
ஈன்றதி லுவந்தி வற்றை
ஏற்றருள் வாணி யென்றேன் !



## கவிஞர் வி. க. அவர்களின் பிற நூல்கள்

1. 1½ ரூபாய்
2. சிட்டுக்குருவி
3. இலக்கிய உலகம்
4. ஏனிந்தப் பெருமூச்சு?
5. கீரிமலையினிலே!
6. கூனியின் சாதனை
7. முறிகண்டிப் பத்து
8. நுணுவிலூர்
9. நல்லூர் நாற்பது
10. குரும்பசிட்டி விநாயகர் பத்து
11. வித்தியானந்த மாலை
12. பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?
13. உய்யும் வழி } அச்சில்
14. கவியரங்கில் கந்தவனம் } அச்சில்

குகன் அச்சகம், தெல்லிப்பழை

